**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 5/2021**

**வா.சா.1 – முத்துமணி** **07.02.2025**

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

எனது கணவர் மகாலிங்கம் 1ம் பிரதிவாதியின் சகோதரர் ஆவார். எனது சகோதரர் பாண்டியனின் மனைவி தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். பாண்டியன் 2005ல் காலமாகிவிட்டார். பாண்டியனும் 1ம் பிரதிவாதியும் குழந்தை இல்லாததால் 2ம் பிரதிவாதியை சுவீகாரம் எடுத்துக்கொண்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் என் பிராதிலும் நிருபண வாக்குமூல்திலும் பாண்டியனும் 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியை சுவீகாரம் எடுத்ததாக சொல்லிவிட்டு தற்பொழுது வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை விற்பனை செய்த விபரம் எனக்கு நன்றாக தெரிந்து அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் 3ம் லக்க சொத்து பாண்டியனுக்கு உரிமையானது என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் லக்க சொத்திற்கு பாண்டியன் பெயரில் பட்டா மாறியுள்ளதை நன்கு தெரிந்தும் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி 1ம் வாதி பாண்டியம்மாளின் கணவரான 3ம் வாதி கிராம உதவியாளராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனது குடும்பத்திற்காகவும் 1ம் வாதியின் குடும்பத்திற்காகவும் பாண்டியன் கஷ்டப்பட்டு கடன் வாங்கி கடன் தொல்லையால் ஏற்பட்ட மன உலைச்சலால் இறந்து போனார் என்றால் சரியல்ல. பாண்டியன் வேலை பார்த்த சொசைட்டியில் கடன் பிரச்சனை ஏற்பட்டு மன உலைச்சலில் இருந்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்காக கஷ்டப்பட்டதால் தான் எங்கள் தந்தை அனைத்து சொத்துக்களையும் பாண்டியனுக்கு மட்டும் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அம்மா இறந்துவிட்டார் என்றால் சரிதான். எங்கள்

கடனை தீர்ப்பதற்காகத்தான் எங்கள் சகோதரர் பாண்டியன் சொத்துக்களை 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் தெரிந்ததால் தான் 20 வருடங்கள் வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு நானும் 3ம் பிரதிவாதியும் சேர்ந்து தாவா சொத்திலிருந்து 3ம் பிரதிவாதியை வெளியேற்ற காவல் தைுறயின் உதவியுடன் முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எழுதி வாங்க 1, 2 பிரதிவாதிகளை காவல் நிலையம் அழைத்து மன உலைச்சலை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 20 வருடங்கள் கழித்து காலதாமதமாக நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பிற்கு 1, 2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பில் 20 வருடங்களுக்கு முன்பே தாவா சொத்துக்களை 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 8ல் தாவா சொத்துக்களை எனது சகோதரர் பாண்டியன் 20 வருடங்களுக்கு முனபு கிரையம் கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள கிரையம் பற்றி தெரிந்திருந்தும் நான் வேண்டுமென்றே 3, 4, 5 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் 20 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள பத்திரங்களை ரத்து செய்ய இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல . தாவா 1ம் லக்க சொத்தில் 12 செண்டு 5ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். 3ம் லக்க சொத்து 4ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா 2ம் லக்க சொத்து 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது எனறால் சரிதான். மேற்படி விபரங்கள் தெரிந்திருந்தும் அதை எனது பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் மறைத்துள்ளேன் என்றால்

சரியல்ல. 2ம் பிரதிவாதி பாண்டியன் மற்றும் 1ம் பிரதிவாதியின் சுவிகார புத்திரன் என்று தெரிந்ததால் தான் 1, 2 பிரதிவாதிகளின் பாகப்பிரிவினை பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 1, 2 பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை 2014ல் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் 1ம் லக்க சொத்தில் மீதி சொத்தும் 4வது இலக்க சொத்தும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை. 1 முதல் 4 லக்க சொத்துக்களை சட்டப்படி உரிமையும் அனுபவமும் பெற்று 1 முதல் 5 பிரதிவாதிகள் இருந்துவருகிறார்கள் என்ற விபரம் நன்கு தெரிந்தும் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 3ம் வாதியின் தூண்டுதலின் பேரில் எனது அப்பாவின் பெயரிலுளள் பட்டா மாறவில்லை என்பதை வைத்துக் கொண்டு அதன்பேரில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் 6 ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 20 வருடங்களுக்கு முன்பே முடிந்து போன பிரச்சனையை 1, 2 பிரதிவாதிகளுக்குள் 2013ல் ஏற்பட்ட குடும்ப பாக விஸ்தியை தெரிந்தும் 3 4, 5 பிரதிவாதிகளுக்கு 20 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட கிரையம் பற்றி நன்கு தெரிந்தும் அவர்கள் அனுபவம் பற்றி தெரிந்தும் சட்டப்படி பதிவு செய்யப்படட பத்திரங்களை தெரிந்திருந்தும் அதை இன்று வரை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பொதுவாக எனது அப்பா பெயரிலுள்ள பட்டாவை வைத்து நான் 3ம் வாதியுடன் கூட்டு சேர்ந்து சொத்தை பாகப்பிரிவினை கேட்டு தொந்தரவு செய்து சொத்தை அபகரிக்க வேண்டும்

என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை